ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023 மாச்சு 21 |


பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் மறுசீரமைப்புக்களுக்கும் ஆதரவளிக்கும் பொருட்டு விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் சி.எ.உ 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகைக்கான ஒப்புதலினையளித்துள்ளது.
பின்வரும் ஊடக அறிக்கையினை பன்னாட்டு நாணய நிதியம் 2023 மாச்சு 20 அன்று வெளியிட்டது.

## இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் ஐ.அ.டொலர் 3 பில்லியனிற்குப் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை ஒப்புதலளிக்கின்றது

- இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் மறுசீரமைப்புக்களுக்கும் ஆதரவளிக்கும் பொருட்டு சி.எ.உ 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் 48 மாதங்கள் நீடிக்கப்பட்ட ஏற்பாடொன்றிற்கு பன்னாட்டு நாணய நிதிய சபை ஒப்புதலளித்தது.

- பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் மீட்டெடுத்தல், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொண்டு வருவதற்கான கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை விரைவுபடுத்தல் என்பன விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் நோக்கங்களாகும். அனைத்து செயற்றிட்ட வழிமுறைகளும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆளகையினை மேம்படுத்துகின்றதன் அவசியத்தினைக் கவனத்திற்கொண்டுள்ளன.

- செயற்றிட்ட சுட்டளவுகளுக்கு இணங்க படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீட்டெடுக்கும் படுகடன் முகாமைத்துவமொன்றினைத் துரிதப்படுத்துவதற்கு இலங்கைக்கும் அதன் சகல கொடுகடன் வழங்குநர்களுக்கும் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பானது இன்றியமையானதாகும்.

**வொஷிங்டன், டீசி – 2023 மாச்சு 20:** ஏறத்தாழ சி.எ.உ 2.286 பில்லியன் (ஒதுக்கீட்டின் 395 சதவீதம் அல்லது ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகையுடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் 48 மாத காலம் நீடிக்கப்பட்ட ஏற்பாடொன்றிற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை இன்று ஒப்புதலளித்தது.

பேரழிவுமிக்க பொருளாதார மற்றும் மானிட நெருக்கடியொன்றினால் இலங்கை கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. பொருளாதாரமானது ஏற்கனவேயிருந்த பாதிப்படையக்கூடிய தன்மைகள் மற்றும் நெருக்கடிக்கு வழிவகுக்கின்ற தவறான கொள்கைப் படிமுறைகள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற குறிப்பிடத்தக்களவிலான சவால்களை எதிர்கொண்டு, தொடர்ச்சியான வெளிநாட்டு அதிர்வுகளினால் மேலும் மோசமடைந்தது.

விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டமானது இலங்கையின் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் மீட்டெடுத்தல், ஏழ்மையான மற்றும் பாதிப்படையக்கூடியவர்கள் மீதான பொருளாதாரத் தாக்கத்தினைத் தணித்தல், நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் ஆளுகை மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்களை வலுப்படுத்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்டுள்ளது. நிறைவேற்றுச் சபையின் தீர்மானம் சி.எ.உ 254 மில்லியனிற்கு (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 333 மில்லியன்) நிகரான உடனடி வழங்கலொன்றினை இயலுமைப்படுத்தும் என்பதுடன் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான நிதியியல் ஆதரவினையும் விரைவுபடுத்தும்.

இலங்கை தொடர்பிலான நிறைவேற்று சபைக் கலந்துரையாடலினைத் தொடர்ந்து, முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி. கிறிஸ்டலினா ஜோர்ஜீவா பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

‘‘உயர் பணவீக்கம், குறைவடைந்த ஒதுக்குகள், நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையற்றதொரு பொதுப் படுகடன் மற்றும் உயர்வடைந்த நிதியியல் துறை பாதிப்படையக்கூடிய தன்மைகள் என்பவற்றிற்கு மத்தியில் கடுமையான மந்தநிலையொன்றுடன் பாரிய பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான சவால்களை இலங்கை எதிர்கொண்டுள்ளது. நிறுவனங்கள் மற்றும் ஆளுகைக் கட்டமைப்புகள் ஆழ்ந்த மறுசீரமைப்புக்களைத் தேவைப்படுத்துகின்றன. நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு, மறுசீரமைப்புக்களுக்கான வலுவானதொரு நிலையுடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் விரைவானதும் காலந்தவறாததுமான அமுலாக்கமானது இன்றியமையாததொன்றாகும்.

‘‘இறை மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையினை மீட்டெடுக்கும் வேளையில் ஏழ்மையிலுள்ள மற்றும் பாதிப்படையக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கு பேராவல்மிக்க அரசிறையின் அடிப்படையிலமைந்த இறைத் திரட்சி அவசியமாயமைகின்றது. இது தொடர்பில், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற வரிச் சீர்திருத்தங்களின் உத்வேகம் பேணப்பட வேண்டும் என்பதுடன் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள் வலுப்படுத்தப்பட்டு ஏழ்மையிலுள்ளவர்களை இலக்காகக்கொள்ள வேண்டும். இறைச் சீராக்கங்கள் வெற்றிகரமானதாயமைய, வரி நிர்வாகம், பொது நிதியியல் மற்றும் செலவு முகாமைத்துவம் மற்றும் வலு விலையிடல் என்பன தொடர்பில் நிலையான தன்மையிலமைந்த இறை நிறுவனசார் மறுசீரமைப்புக்கள் முக்கியமானவையாகும்.

‘‘முக்கியமான உத்தியோகபூர்வ இருபுடைக் கொடுகடன் வழங்குநர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க மற்றும் நம்பகமான நிதியியல் உத்தரவாதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கு இணங்க படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையினை மீட்டெடுப்பதில் அதிகாரிகள் மற்றும் கொடுகடன் வழங்குநர்கள் விரைவான முன்னேற்றமொன்றினை மேற்கொள்வது தற்போது முக்கியமானதாகும். செயற்றிட்ட சுட்டளவுகள் மற்றும் காலந்தவறாத முறையொன்றில் கொடுகடன் வழங்குநர்களிடையே சமமான சுமைப் பகிர்வு என்பவற்றுடன் இசைந்து செல்கின்ற படுகடன் தீர்மானமொன்றினை வெளிப்படையாக அடைவதற்கான அதிகாரிகளின் திடசங்கற்பம் வரவேற்கத்தக்கதாகும்.

‘‘இலங்கை அதன் பணவீக்க இலக்கிடல் முறைமையின் நம்பகத்தன்மையினைப் பாதுகாக்கும் பொருட்டு பல்நோக்கு பணவீக்க வீழ்ச்சி உபாயத்தில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். சந்தை நம்பிக்கையினை மீளப்பெறுவதனால், பாரியளவிலான செலாவணி வீத நெகிழ்வுத்தன்மை தொடர்பில் அதிகாரிகளின் அண்மைய அறிமுகமானது, ஒதுக்குத் தாங்கியிருப்பினை மீள் உருவாக்குவதற்குத் துணைபுரியும்.

‘‘சிறந்த மற்றும் போதுமாந்தன்மையிலமைந்த மூலதனமயமாக்கப்பட்ட வங்கித்தொழில் முறைமையொன்றினைப் பேணுவது அவசியமானதொன்றாகும். வங்கி மீள்மூலதனமயமாக்கல் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் மேற்பார்வை மற்றும் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுப்படுத்தல் என்பன நிதியியல் துறை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு இன்றியமையாதனவாகும்.

‘‘ஊழலுக்கு எதிரான சட்டவாக்கத்தினை வலுப்படுத்தல் உள்ளடங்கலாக ஊழலைக் கையாள்வதற்குத் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடரப்பட வேண்டும். மேலும் அனைத்தையுமுள்ளடக்கிய ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலொன்று இலங்கையின் ஊழல் எதிர்ப்பு மற்றும் ஆளுகைக் கட்டமைப்பின் மதிப்பீடொன்றினை மேற்கொள்கின்ற தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகையினைக் கண்டறிகின்ற பணிக்குழுவின் மூலம் வழிநடத்தப்படல் வேண்டும். அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான தொழில்நுட்ப ஆதரவுடன் வளர்ச்சியினை மேம்படுத்துகின்ற கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை அதிகாரிகள் விரைவுபடுத்த வேண்டும்.’’

[https://www.imf.org/en/News/Articles/2023/03/20/pr2379-imf-executive-board-approves-under-the-new-eff-arrangement-for-sri-lanka](https://www.imf.org/en/News/Articles/2023/03/20/pr2379-imf-executive-board-approves-under-the-new-eff-arrangement-for-sri-lanka)